Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 294/2023** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **லெட்சுமணபெருமாள்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் .**

**02.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது ராணிசேதுபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எனது ஊர்க்காரரான அசா.1 கண்ணனின் டிராக்டர் வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழுங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

**1.** கடந்த 26.06.2023ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு நானும், எங்க ஊரை சேர்ந்த ராமகிருஷ்ணன் என்பவரும் எங்கள் ஊர் பெருமாள் கோவில் அருகே இருந்தபோது பரளச்சி போலீசார் குற்ற எண். 62/2023 வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும் ராமகிருஷ்ணனும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 294/2023** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **ராமகிருஷ்ணன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் .**

**02.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது பரளச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை கடந்த மூன்று வருடத்திற்கு முன்பு எனது ஊர்க்காரான அசா.1 கண்ணனின் டிராக்டர் வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். என்முன்பாக போலீசார் எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **(பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

**1.** கடந்த 26.06.2023ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு நானும், எங்க ஊரை சேர்ந்த லெட்சுமணபெருமாள் என்பவரும் எங்கள் ஊர் பெருமாள் கோவில் அருகே இருந்தபோது பரளச்சி போலீசார் குற்ற எண். 62/2023 வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நானும் லெட்சுமணபெருமாளும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**